**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 194 /2018**

பெயர் – முருகன் எ.ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2022 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற பேருந்து இடைநில்லா பேருந்து என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு பிறகு என்னை ஒரு மாதம் பணி நீக்கம் செய்திருந்தார்கள். அதன் பிறகு 7 நாள்கள் பழகுநர் பயிற்சி கொடுத்தார்கள். எனது பணி காலத்தில் இந்த வழக்கு சம்பவம் 3 வது என்றால் சரிதான். அடிக்கடி விபத்து ஏற்படுத்தியதால் பலமுறை எனக்கு சம்பள உயர்வு ரத்தாகி உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்துக்கு முன்பு இருசக்கர வாகனம் சென்றது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கு பின்னால் தான் பேருந்து சென்றது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் மெதுவாகவும் கவணமாகவும் ரோட்டின் இடது புற ஓரமாக சென்று கொண்டிருந்தார் என்றும் நான் தான் பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2022.03.11 17:42:48 +0530

இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. இந்த விபத்துக்கு எனது கவனக்குறைவும் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை ஓட்டியது தான் காரணம் என்பதால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையல்ல என்றால் சரியல்ல.,

**மறுவிசாரணை –** இல்லை

A BARSAD BEGUM

Digitally signed by A BARSAD BEGUM
Date: 2022.03.11 17:42:54 +0530